40576

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

48 T I,II

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Ord. Level) Examination, 2021(2022)

දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය I, II
தமிழ் இலக்கிய நயம் I, II
Appreciation of Tamil Literary Texts I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ வினாத்தாள் **I**, வினாத்தாள் **II** ஆகியவற்றுக்கு விடையளித்து முழுநேரம் முடிவடைந்த பின்பு வேறுவேறாக கையளிக்கவும்.
- ✳ வினாத்தாள் **I** இற்குரிய விடையை **இவ்வினாத்தாளிலேயே** எழுதவேண்டும்.
- ✳ வினாத்தாள் **II** இற்கான விடையை எழுதுவதற்கு விடை எழுதும் புத்தகத்தைப் பயன்படுத்தவும்.
- ✳ வினாத்தாள் **I** இற்கு **40** புள்ளிகளும் வினாத்தாள் **II** இற்கு **60** புள்ளிகளும் வழங்கப்படும்.

## தமிழ் இலக்கிய நயம் - வினாத்தாள் I

(எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.)

**1.** (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) "முத்துடைத் தாம நிரை தாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ நான்"

(அ) இங்கு 'கைத்தலம் பற்றுதல்' என்றால் என்ன?

..........................................................................................

(ஆ) 'முத்துடைத் தாம நிரை தாழ்ந்த' என்ற தொடரை விளக்குக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(ii) "அலகு வாள்விழி ஆயிழை நன்னுதல்
திலகம் கண்டு செஞ்சிலை மாரனும்
கலகமே செய்யும் கண் இதுவாம் என
மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான்"

(அ) 'அலகு வாள்விழி ஆயிழை' - இத்தொடரை விளக்குக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations Sri Lanka

**2.** கீழ்க்காணும் உரைப்பகுதியை **அல்லது** செய்யுட்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

எனது தீவில் மட்டும்தான் நான் அழுவேன். இந்தத் தீவில் இருக்கின்றபோது அடிக்கடி அழுகை வருகிறது. வெளியே போகின்ற போதெல்லாம் அணிந்து செல்கிற சிரிப்பைக் கழட்டி எறிந்துவிட்டுச் சுதந்திரமாக அழுவேன். யன்னலுக்கு இது வடிவாகத் தெரியும்.

இப்போதும் அழுதேன்.

முப்பந்தைந்து வருடங்கள் தாண்டியிருக்கிறேன்.

இதுவரையில் எனது தீவுதான் இடம் மாறியிருக்கிறது. தீவில் எதுவும் மாறவில்லை. என்னாலும் இங்கிருந்து நிரந்தரமாக வெளியே போக முடியவில்லை. எவ்வளவுதான் முயற்சித்தாலும் எனது தீவிற்கே மறுபடி மறுபடி என்னைத் திருப்பியனுப்பிவிடுகிறார்கள்.

நானும் என்னைப் பலவகைகளில் பலமாக்கி, எச்சரிக்கையாக்கி வைத்திருக்கிறேன். இருந்தும் என்ன... நான் தோற்றுப்போவதுதான் யதார்த்தம். இல்லையில்லை யதார்த்தம்தான் என்னைத் தோற்கடிக்கிறது.

அழுவதால் ஒன்றும் நடக்காது என்பது எனக்குத் தெரியாததல்ல. அதைவிட அழுவதும் எனக்குப் பிடிப்பதில்லை. அழுகை என்ன எனது விருப்பத்தை விசாரித்துக்கொண்டா வருகிறது. தானாக வருகிறது, இப்போது வருவதைப்போல. தொண்டை பாரமாகியிருந்தது.

அழுதேன்.
யன்னலால் வானத்தைப் பார்த்தபடி அழுதேன்.

எங்கள் வீட்டு சேவலுக்கும் பேட்டுக்கும் எப்போது சண்டை ஆரம்பித்தது என்று எனக்கு ஞாபகமில்லை. நான் அவதானித்த நாளிலிருந்து அவை ஒன்றையொன்று உர்ரென்று முகத்தைத் திருப்பிவைத்துக்கொண்டிருந்தன. குஞ்சுகள் தங்கள் பாட்டில். இத்தனைக்கும் அவை ஒரே கரப்புக்குள்தான் இருந்தன.

(i) 'அணிந்து செல்லுகின்ற சிரிப்பு' என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது?

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

(04 புள்ளிகள்)

(ii) 'எவ்வளவுதான் முயற்சித்தாலும் எனது தீவுக்கே மறுபடி மறுபடி என்னைத் திருப்பியனுப்பி விடுகிறார்கள்'- திருப்பி அனுப்புபவர்கள் யார்? எவ்வாறு திருப்பி அனுப்புகிறார்கள்?

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

(04 புள்ளிகள்)

(iii) 'நான் தோற்றுப்போவதுதான் யதார்த்தம்', 'இல்லையில்லை யதார்த்தம்தான் என்னைத் தோற்கடிக்கிறது'- இந்த இரு கூற்றுக்களுக்குமிடையிலான பொருள் வேறுபாட்டை விளக்குக.

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

(06 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

(iii) புத்தகசாலையில் எவ்வாறான நூல்கள் எவ்வாறாக வைக்கப்பட வேண்டும் எனக் கவிஞர் விரும்புகின்றார்?

..........................................................................................................................

..........................................................................................................................

(06 புள்ளிகள்)

(iv) இக்கவிதைப் பகுதியில் இடம்பெற்றுள்ள உவமை உருவகங்களுள் எவையேனும் **மூன்றினை** விளக்குக.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

(06 புள்ளிகள்)

* *



Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**48 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Ord. Level) Examination, 2021(2022)

දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය I, II
**தமிழ் இலக்கிய நயம் I, II**
Appreciation of Tamil Literary Texts I, II

## தமிழ் இலக்கிய நயம் - வினாத்தாள் II

※ **1 ஆம் வினாவுக்கும்,** ஏனைய **2,3,4,5** ஆகிய வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்குமாக, மொத்தம் **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்குக.

※ இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு விடை எழுதும் புத்தகத்தைப் பயன்படுத்துக.

**1.** பின்வரும் கவிதைப் பகுதியை வாசித்து, அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்தபட்சம் 200 சொற்களில் எழுதுக.

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுஓச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி;
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாது ஒழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி.

மன்னு மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோ லதுஓச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி;
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னு மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி.

உழவர் ஓதை மதகோதை
உடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி;
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்த எல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன் தன்
வளனே வாழி காவேரி.

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை அது போர்த்துக்
கருங்க யல்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி
கருங்க யற்கண் விழித்து ஒல்கி நடந்த வெல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி.

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka